முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் யூகிமுனிவர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

26.10.2018, வெள்ளிக்கிழமை

1. **அருட்பெருஞ் சக்தி குருவே**
   **ஆறுமுகன் ஆற்றலாக வந்த**
   **அருட்குருவே ஆறுமுக அரங்கா**
   **அண்ணலே உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
   குவலயத்தில் **விளம்பி துலை திங்கள்**
   **தெரியவே நவதிகதி புகர் வாரம்**
   **(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 9ம் நாள் 26.10.2018, வெள்ளிக்கிழமை)**
   **தேசிகனுக்கு யூகி முனிவர் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
   உயர்வான அரங்கன் அருள்
   ஞானவழி பெற்றவர்களெல்லாம்
   ஞான ஒளி பெற்று சிறப்பர்
4. சிறப்பு தரும் அரங்கன் மலரடி
   சேவித்து திருவடி தீட்சையை
   மறுப்பில்லா ஏற்று வருபவரெல்லாம்
   மரணமில்லா பெருவாழ்வு காண்பர்
5. காண்கவே அரங்கன் தருமம்
   கலியுகம் தன்னை மாற்றும்
   உண்மை ஆன்மீக ஞானயுகமாக
   உருவாக்கும் சக்திமிகு தருமம்
6. தருமம்தனை உலக மக்களெல்லாம்
   தட்டாது ஏற்றுத் தொடர
   கரும வினைகள் விலகுவதுடன்
   கடைத்தேற்றம் காண உண்டான
7. உண்டான புண்ணிய பலமடைவர்
   ஊழை வெல்லும் உயர்மக்களாக
   தண்டாயுதன் தயவை பெற்று
   தரணியோர் அதிசிறப்பு காண்பர்
8. காண்கவே ஏழாம் படை வீடு
   கந்தவேலன் அருள் புரியும்
   நன்மை தரும் ஞான வீடு
   நானிலத்தில் உலக மக்கள் நாடி

9. நாடியே ஞானத்தலைவா என
நம்பி மக்கள் எல்லோரும்
தேடியே அரங்கமகா ஞானியின்
திருவடி பணிந்து ஏற்று நடக்க

10. நடக்கவே ஞானவழித் தொடர
நடைமுறைகள் எல்லாம் சிறக்கும்
இடர்பாடுகள் எதிர்மறைகள் எல்லாம்
இனி மக்களை வருத்தா விலகும்

11. விலகவே மக்களிடை பேதம்
விரைந்து விலகி சமத்துவம்
கலகமிலா சமதர்ம ஞானயுகம்
கலியுகத்தில் கந்தனால் அமையும் ஒளி சூட்சும நூல் முற்றே.

—சுபம்—